# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 26.03.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

தக்வாவை மேற்கொண்டு அவன் மீதே பொறுப்பை விட்டு விடுபவர்களுக்கு அல்லாஹ் போதுமானவன். மனிதன் சிந்தித்தும் பார்க்காத இடத்திலிருந்து அவனுக்கு இறைவன் வாழ்வுக்கு தேவையானவற்றை வழங்குகிறான். கற்பனைக்கு எட்டாத அருளை தனது அடியார்களுக்கு இறைவன் காட்டுகிறான். ஒவ்வொரு காலத்திலும் ஈமான் கொண்டவர்களுக்கு காட்டிக் கொண்டும் இருக்கிறான். இதற்கு உதாரணமாக சில சம்பவங்களை இன்று எடுத்து வைப்பேன்.

அதுபோன்று அல்லாஹ் தனது ரோஷத்தைக் காட்டியவாறு எவ்வாறு கணக்கு எடுக்கிறான் என்பது தொடர்பாக சில சம்பவங்களை கூற தேர்ந்தெடுத்துள்ளேன்.

ஜமாஅத் வரலாற்றில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய நிறைய சம்பவங்கள் மிகவும் விரிவாக எழுதப்பட்டுள்ளன.

சவுத்ரி குலாம் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்: நான் ஹகீம் காதிம் அலி சாஹிப் உடைய ஓர் உறவினர் மூலமாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பற்றி கேள்விப்பட்டேன்.

ஒருமுறை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காஷ்மீரிலிருந்து ராவல்பிண்டி வழியாக வந்து கொண்டிருந்தார்கள். வரும் வழியிலேயே பயணச் செலவுக்கு வைத்திருந்த பணம் தீர்ந்து போய் விட்டது. நான் அதுபற்றி கேட்டபோது, இந்த குதிரையை 400 அல்லது 500 ரூபாய்க்கு விற்று விட்டால் செலவுக்கு அதனைப் பயன்படுத்தலாம் என்று கூறினார்கள். அந்த குதிரை 700 ரூபாய்க்கு வாங்கியிருந்தார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் (விற்கப்படவிருந்த) அந்த குதிரைக்கு வயிற்றில் வலி ஏற்பட்டு ராவல்பிண்டி வந்தடைந்ததும் இறந்து விட்டது. குதிரை வண்டிக்காரருக்கு கூலி கொடுக்க வேண்டும். பணம் தேவைப்படுகிறது. வண்டிக்காரர் பணம் கேட்கிறார் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நூருத்தீன் உனது இந்த இறைவன் இறந்து விட்டான். நான் இப்போது எனது அசல் இறைவனின் பக்கம் திரும்புகிறேன். அவனே உறுதுணையாக நிற்பவன் என்று கூறினார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு சீக்கியர் தனது வயதான நோயாளியான தந்தையை அழைத்துக் கொண்டு அவ்விடத்திற்கு வந்தார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பார்த்து விட்டு மருந்து எழுதிக் கொடுத்தார்கள். இதனை கூறுபவர் விளக்குகிறார். அவர் கொடுத்த ரொக்கம் எங்களுக்கு ஜம்மு வரை செல்வதற்கு போதுமானதாக இருந்தது. இதுவே தக்வா ஆகும். உலகியல் பொருள் ஒன்று அழிந்துபோன பிறகும் கூட அதற்காக அழுது ஒப்பாரி வைக்கவில்லை. மாறாக முழுமையான தவக்குல் உடன் இறைவன் பக்கம் கவனத்தை திருப்பினார்கள். இறைவனும் சிறிதும் எதிர்பாராத விதமாக ரிஸ்கிற்கு ஏற்பாடு செய்தான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய இதுபோன்ற சம்பவங்கள் அவர்களின் வாழ்வு முழுக்க நிரம்பி காணப்படுகிறது. அது ஈமான் மற்றும் உறுதிப்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. மிர்ஸா ஸலாமுல்லாஹ் சாஹிப் மிஸ்ரி குத்புத்தீன் சாஹிப் உடைய அறிவிப்பிலிருந்து கூறுகின்றார்கள்.

ஒருமுறை ஓர் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் துணிகள் துவைக்கப்பட்டுள்ளதா என்று வீட்டாரிடம் விசாரித்தார்கள். ஒரே ஒரு பைஜாமா மட்டும் இருந்தது. அதுவும் கிழிந்திருந்தது என்று தெரிய வந்தது. ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அந்நாட்களில் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் செயலராக இருந்தார்கள். காதியானில் நடந்த சம்பவம் இது. நவாம்

முஹம்மது அலி கான் சாஹிப் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வீட்டிற்கு ஒருவரை தூது அனுப்பினார்கள். ஹுஸூர் தொழுகைக்கு நேரமாகிறது. (பெருநாள்) தொழுகைக்குப் பிறகு மக்கள் குர்பானி கொடுக்க வேண்டும். விரைவில் வாருங்கள் என்று கூறினார். சிறிது நேரத்திற்குள் வந்து விடுவேன் என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். சிறிது நேரம் கழித்து இன்னொருவர் வந்தார். ஹுஸூர் முதலில் சொன்ன அதே பதிலை அவரிடம் கூறினார்கள். சிறிது நேரத்தில் இன்னொருவர் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வாசலுக்கு வந்து குரல் கொடுத்தார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பணியாளரிடம் வாசலில் யார் நிற்கிறார் என்று பார்க்குமாறு கூறினார்கள். வந்தவர் கூறினார். நான் வஸீராபாத்திலிருந்து வருகிறேன். ஹஸ்ரத் சாஹிபை சந்திக்க வேண்டும். ஹுஸூர் அவரை உள்ளே அழைத்தார்கள். ஹுஸூர் நான் வஸீராபாத்தில் வசிப்பவன். ஹுஸூருக்காவும், அம்மாவுக்காகவும், குழந்தைகளுக்காகவும் துணிமணிகள் வாங்கி வந்துள்ளேன். இரவில் மாட்டு வண்டி ஏதும் கிடைக்காததால் பட்டாலாவிலிருந்து நடந்தே வந்து சேர்ந்துள்ளேன் என்று கூறினார். அல்லாஹ் இவ்வாறு அவர்களின் தேவைக்கு உடனே ஏற்பாடு செய்தான்.

சூஃபி அதாமுஹம்மத் சாஹிப் அவர்களும் ஒரு சம்பவம் கூறுகின்றார்கள். அதுவும் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் தான்.

ஈத் உடைய ஒரு காலையில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஏழைகளுக்கு உடைகள் வழங்கினார்கள். தான் பயன்படுத்தி வந்த ஆடையையும் கூட கொடுத்து விட்டார்கள்.

(எல்லா ஆடையையும் கொடுத்து விட்டு பெருநாள் தொழுகை எப்படி தொழுவீர்கள்? என்று வீட்டினர் கேட்டனர். இறைவன் அதற்காக எனக்கு ஏற்பாடு செய்வான் என்று கூறினார்கள். ஈத் தொழுகைக்கு செல்வதற்கு ஒரு சில நிமிடங்கள் பாக்கி இருக்கும் போது ஒரு மனிதர் ஹஸ்ரத் சாஹிபின் முன் உடைகளை எடுத்துக் கொண்டு வந்தார். ஹுஸூர் உடைகளை வாங்கிக் கொண்டு கூறினார்கள். பாருங்கள்: எனது இறைவன் குறித்த நேரத்தில் எனக்கு ஆடைகளை அனுப்பி விட்டான். இறைவன் அன்னாரின் தேவைகளுக்கு தானே பொறுப்பேற்றுக் கொண்டான். அவர்களது எல்லா தேவைகளையும் நிறைவேற்றித் தந்தான்.

ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ராஜேகி (ரலி) அவர்கள் கூறுகின்றார். எனது பெரிய மகன் இக்பால் அஹ்மத் அப்போது குழந்தையாக இருந்தான். நான், எனது மனைவி, அந்த குழந்தை ஆகிய அனைவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டில் தங்கியிருப்பதாக கனவில் பார்க்கிறேன். எனது மனைவி ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய மகளாக இருப்பதாகவும் அக்கனவில் நான் உணர்கிறேன். எனது மேற்குறிப்பிட்ட மகன் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய மகள்வழிப் பேரனாக இருப்பதாகவும் கனவில் உணர்கிறேன். மேலும் நானும் எனது அப்பையனும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டு இருப்பதாகவும் காண்கிறேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் துஆ செய்தவாறு கூறினார்கள். பஞ்சாபி மொழியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவன் உனது தேவைகளை நிறைவேற்றுவானாக.

அவர் கூறுகின்றார். இந்த கனவு கண்ட பிறகு இன்று வரை இறைவன் எனது தேவைகளை நான் நினைத்துப் பார்க்காத இடத்திலிருந்து நிறைவேற்றித் தருகிறான். எனது வீட்டினரும் சரி, எனது அக்கம்பக்கத்தினரும் சரி, இறைவன் எனது தேவைகளை நிறைவேற்றித் தருவதாக கண்டுள்ளனர்.

இவ்வாறு இவர்களுடைய சம்பவமும் அதிக அளவில் உள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** அசல் ராஸிக் (உணவளிப்பவன்) இறைவனாவான். ஒரு மனிதர் இறைவனை நம்பும் போது ஒருபோதும் வாழ்வுக்கு தேவையானவற்றிலிருந்து விலக்கப்படமாட்டார். அல்லாஹ் தன் மீது தவக்குல் வைப்பவருக்கு எல்லா தரப்பிலிருந்தும் வாழ்வுக்கு தேவையானவற்றை கொண்டு சேர்த்து விடுகிறான்.

எவர் என் மீது நம்பிக்கை வைத்து, என் மீது பொறுப்பை சுமத்திவிடுவாரோ அவருக்கு வானத்திலிருந்து ரிஸ்கை பொழிகிறேன். அவரது பாதத்தின் அடியிலிருந்து உணவை வெளிப்படச் செய்வேன் என்று இறைவன் கூறுகிறான்.

எனவே ஒருவர் இறைவன் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் பண்பை நீங்கள் மேற்கொள்ளுங்கள் என்ற இறை கூற்றிற்கேற்ப இறைவன் மீது நம்பிக்கை கொண்டு நபிமார்கள் மிக அதிகமாக இறை சாயலைப் பெற்றனர். எல்லாவற்றிலும் அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்பின் சாயலைப் பெற்றனர்.

இது சம்பந்தமாக சில ஹதீஸ்கள் உள்ளன.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களுடைய அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். என்னிடம் உஹது மலைக்கு சமமாக தங்கம் இருப்பினும், கடனை திருப்பிக் கொடுப்பதற்காக சற்று வைத்துக் கொள்வது தவிர மூன்று இரவு மூன்று பகலுக்கு மேல் எதுவும் எஞ்சியில்லாமல் இருப்பதே எனக்கு மிகவும் மகிழ்ச்சியானது.

எவ்வளவு பெரும் செல்வம் இருந்தாலும் அது என்னிடத்திலேயே இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. அதனை பகிர்ந்தளித்துக் கொண்ட செல்வதில்தான் எனக்கு மகிழ்ச்சி உள்ளது.

மூஸா பின் அனஸ் (ரலி) தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தின் பெயரால் எப்போது எதை வேண்டினாலும் உடனே வழங்கி விடுவார்கள். ஒருமுறை ஒரு மனிதர் அன்னாரிடம் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மனிதருக்கு இரு மலைகளுக்கு இடையில் மேய்ந்து கொண்டிருந்த அனைத்து ஆடுகளையும் வழங்கினார்கள். அவர் தனது சமுதாயத்தின் பக்கம் அவற்றை கொண்டு சென்று தமது சமுதாயத்தினரிடம் கூறினார். எமது சமுதாயத்தினரே முஸ்லிமாகி விடுங்கள். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் எவ்வளவு அதிகமாக வழங்கக் கூடியவர்கள் எனில், பசி, பட்டினியின் பயம் சிறிது கூட நம்மிடம் எஞ்சியிருக்காது.

இப்னு ஷுஆப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு தன்னுடன் இருந்த முஸ்லிம்களுடன் வெளியேறினார்கள். ஹுனைன் போர் செய்தார்கள். அதில் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் உதவி செய்தான். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஃப்வான் பின் உமய்யாவுக்கு 100 ஒட்டகங்கள் வழங்கினார்கள். பிறகு நூறு ஒட்டகங்கள் வழங்கினார்கள். பிறகு 100 ஒட்டகங்கள் வழங்கினார்கள். இவ்வாறு 300 ஒட்டகங்கள் வழங்கினார்கள். இது முஸ்லிம் ஹதீஸில் உள்ளது.

இப்னு ஸாபி (ரலி) அறிவிக்கின்றார். சையிது இப்னு முஸய்யப் (ரலி) கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு மிகப் பெரிய நன்கொடையை வழங்கினார்கள். இதை வழங்குவதற்கு முன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் எனக்கு மிகவும் வெறுக்கத்தக்க ஒருவராக தென்பட்டார்கள். ஆனால் எனக்கு கொடை வழங்க வழங்க மிகவும் விருப்பத்திற்குரியர்களாகி விட்டார்கள். இப்போது எனக்கு மிகவும் அன்பிற்குரியவராக ஆகி விட்டார். சில வேளை உலக செல்வம் மார்க்கத்தின் பக்கம் ஈர்த்து விடுகிறது. சத்தியத்தின் வழியை காட்டி விடுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சப்வானுக்கு மிகவும் அன்புக்குரியவராகி விட்டார்கள். அதற்கு பிறகு அவருக்கு கிடைத்த பெரும் செல்வம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்ட பேரன்பாகவே மாறிவிட்டது.

இன்னும் அறிவிப்புகளில் வருகிறது. ஸஃப்வான் (ரலி), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பள்ளத்தாக்கை கடந்த போது ஓர் ஆட்டு மந்தை சென்று கொண்டிருந்தது. ஸஃப்வான் அதை மிகுந்த ஆசையுடன் பார்த்தார். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அம்மனிதரிடம், உமக்கு இது மிகவும் பிடித்திருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு ஸஃப்வான் ஆசையோடு அதைப் பார்த்தவாறு ஆம்! என்று சொன்னார்கள். போய் அதனை நீரே எடுத்துக் கொள்ளும் என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஸஃப்வான் இவ்வளவு பெரிய நன்கொடையைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலடியிலேயே வீழ்ந்து விட்டார்; இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். இத்தகைய பெருங்கொடையை இறைவனின் நபிதான் செய்ய முடியும் என்று கூறினார். ஸஃப்வான் மிகவும் கெட்ட

எதிரியாக இருந்தார். மக்கா வெற்றியின் போது அவர் மக்காவை விட்டே ஓடிவிட்டார். முஸ்லிம்களுக்கு பெரும் அநீதி இழைத்திருந்ததால் தாம் பிடிக்கப்படுவோம். தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு சாத்தியமே இல்லை என்று கருதியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தது மட்டுமின்றி, அளவில்லாத கொடையும் வழங்கினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களுக்கு – தமது உம்மத்திற்கு அறிவுரை வழங்கியிருந்தார்கள். குறிப்பாக மார்க்க விஷயத்தில் செலவு செய்வதில் கருமித்தனம் காட்டாமல் இருக்க போதித்தார்கள். அதேபோன்று அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமையை செய்வதற்கும் அதில் குறைவு ஏற்படக்கூடாது என்றும் சுட்டிக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபுபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் போதனை செய்தவாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் வழியில் கணக்கிட்டு செலவு செய்யாதீர்கள். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் கணக்கிட்டுதான் வழங்குவான். உங்கள் பணப்பையை மூடியே வைக்காதீர்கள். அவ்வாறு செய்தால் பிறகு அது நிரந்தரமாக மூடி வைக்கப்படும்.

பைசா செலவு செய்யவில்லை எனில் பிறகு வரவும் இருக்காது. எவ்வளவு உள்ளத்தில் ஆற்றல் உள்ளதோ அந்த அளவுக்கு மனம் திறந்து செலவு செய்யுங்கள். ஒவ்வொருவரின் ஆற்றலும் அவரவர் தகுதிக்கேற்ப வித்தியாசப்படும். அதனை கவனத்தில் கொண்டு மார்க்கத்திற்காக செலவு செய்ய வேண்டும். தக்வா, தவக்குல் இரண்டையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஜமாஅத்தில் உருவாக்க விரும்பினார்கள். சஹாபாக்களிடம் அது உருவாகி இருந்தது என்பதற்கு வரலாறு சான்று பகர்கிறது. படிப்பறிவு இல்லாத மக்கள் என்று கருதப்படுபவர்கள் இறையடியார்களாக மாறிவிட்டதன் மூலம் ஓர் மகத்தான உதாரணமாகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்கு செல்வம் கிடைக்க வேண்டுமே என்று கவலைப்பட்டதில்லை. மாறாக, எனது உம்மத்தும் இறைவனைப் பெற்ற மக்களாக மாற வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டார்கள். அதற்காக சஹாபாக்களுக்கு அறிவுரை கூறினார்கள். மேலும் அந்த போதனைகளின்படி செயல்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுக்கு அறிவுரை பகர்ந்தவாறு கூறினார்கள். அது பற்றி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் அமர் பின் அவ்ஃப் அன்சாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அபுஉபைதா பின் ஜராஹ் அவர்களை ஜிஸ்யா வாங்குவதற்காக பஹ்ரைனுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் பஹ்ரைன் மக்களுடன் சமாதான உடன்படிக்கை செய்திருந்தார்கள். மேலும் அஃலா பின் ஹஸமி என்பவரை அந்த நாட்டிற்கு அமீராக ஆக்கினார்கள். அபூஉபைதா பஹ்ரைனில் இருந்து பணம் பெற்றுவரும் போது அன்சார்களுக்கு தகவல் தெரிந்தது. அன்சார்கள் பெரும் கூட்டமாக சுபுஹ் தொழுகைக்கு வந்து சேர்ந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்து முடித்ததும் அன்சார்கள் ஹுஸூருக்கு முன்னால் வந்தார்கள். அன்சார்கள் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அன்சார்களைப் பார்த்து புன்முறுவல் பூத்தவாறு கூறினார்கள். அபூஉபைதா கொஞ்சம் பொருளுடன் திரும்பி உள்ளார் என்று நீங்கள் கேள்விப்பட்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன் என்று கூறினார்கள். அன்சார்கள் ஆம் அல்லாஹ்வின் தூதரே என்றனர்.

பிறகு உங்களுக்கு ஒரு நற்செய்தி – நல்ல எதிர்பார்ப்பு கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் மீது ஆணை! உங்களுக்கு வறுமை வந்து விடுமே என்று நான் பயப்படவில்லை. மாறாக உங்களிடம் உலக ஆதாயம் தேடும் குழப்பம் முன்னவர்களின் மீது ஏற்பட்டதுபோன்று ஏற்பட்டு விடக்கூடாதே என்ற பயம்தான் உள்ளது. பிறகு நீங்களும் அதற்காக போட்டிபோடத் தொடங்கி விடுவீர்கள். பிறகு அவர்களைப் போன்று உங்களையும் இந்த உலகாதாய சிந்தனை அழித்து விடுமே என்றுதான் பயப்படுகிறேன்.

இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இருந்த பயம். ஆனால் அவர்களின் இந்த கடுமையான எச்சரிக்கைக்குப் பிறகும் கூட உம்மத்தின் பெரும்பாலார் இதே பந்தயத்தால் பீடிக்கப்பட்டு விட்டது.

ஆனால் ஒரு அஹ்மதி தனது பைஅத் நிபந்தனையைக் கருத்தில் கொண்டு இதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்க வேண்டும். பிறகு நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தின்மீது அமல் செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு தமது தோழர்களிடம் இந்த விஷயம் குறித்து தெளிவுபடுத்தினார்கள் என்றும் பார்க்க வேண்டும்.

டாக்டர் பஷாரத் அஹ்மத் சாஹிப் தமது நூலில் எழுதுகிறார். சையத் குலாம் ஹுஸைன் சாஹிப் மே மாதம் 28 ஆம் தேதி ஒரு சம்பவத்தை அல்ஹகம் பத்திரிகையில் 7 ஜுன் 1937 -ல் வெளியிட்டுள்ளார்கள். அதன் சுருக்கத்தை நான் எனது வார்த்தையில் கூறுகிறேன். சம்பவம் அநேகமாக 1898 -ல் நடந்ததாகும். செய்யது குலாம் ஹுஸைன் சாஹிப் காதியானில் வசித்து வந்தார்கள். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தன்னிடம் ஏதாவது பணியைத் தர வேண்டும் என்று உளமாற விரும்பியவாறு ஒருவர் தங்கியிருந்தார்கள். கடைசியில் கடிதத்தைப் படித்துப் பார்த்து ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அதனை செய்யது சாஹிப் கையில் தந்து இது ஒரு ரசீது. பட்டாலாவுக்கு போய் இதனை கொடுத்து பொருள் வாங்கி வருமாறு அனுப்பினார்கள். அனுப்பும்போது சற்று பொறுங்கள் என்று கூறி ஐந்து ரூபாய் கொடுத்து இது சென்று வருவதற்கான செலவுக்கும், பார்சலுக்குரிய கூலிக்காகவும் வைத்துக் கொள்ளுமாறு கூறினார்கள். அந்தக் காலத்தில் காதியானில் ஒன்றிரண்டு மாட்டு வண்டிகள் தான் உண்டு. அதுவும் தேவைப்படும் போது இருப்பதில்லை. சையத் சாஹிப் அப்போது 15 வயது பையன். தொண்டு செய்யும் ஆர்வத்தில் நடந்தே சென்று விட்டார். பட்டாலா சென்ற பிறகு தான் பார்சல் வந்தது தெரிய வந்தது. அங்கு ஒரு சத்திரத்தில் இரவு தங்கினார். பார்சலுக்குரிய கட்டணத்தையும் அனுப்பியவரே கொடுத்து விட்டதும் தெரிய வந்தது. பார்சலைப் பெற்று வரும் போது குதிரை வண்டிக்காரர் கூலி அதிகமாக கேட்டார். வசதிகளைக் குறைத்துக் கொண்டு நல்ல வேலை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒரு தள்ளுவண்டிக்காரரின் வண்டியில் 4 அனாவுக்கு அந்த பார்சல் கூடையை வைத்து விட்டு நடந்தே காதியானுக்கு வந்தார்கள். காதியான் வந்ததும் ஹுஸுர் (அலை) அவர்கள் தந்த 5 ரூபாயிலிருந்து நாலனாவை கூலிக்காரரிடம் கொடுத்து விட்டு மீதி 4.75 ரூபாயை ஜேப்பில் போட்டுக் கொண்டு மஸ்ஜித் முபாரக்கின் படிக்கட்டில் ஏறி ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் வீட்டின் முன் வந்து தாம் வந்ததை தெரிவித்தார். ஹஸ்ரத் (அலை) அவர்கள் உடனே வெளியில் வந்தார்கள். அவரைப் பார்த்து புன்முறுவல் செய்தவாறு வந்து விட்டீர்களா? சற்று இருங்கள் என்று கூறி உள்ளே சென்று ஒரு பெரிய கத்தியை எடுத்து வந்தார்கள். பார்சல் ஒரு துணியால் தைக்கப்பட்டிருந்தது. அத்துணியைக் கிழித்து இரு கைகளையும் உள்ளே விட்டு அதில் இருந்த பொருளை வெளியே எடுத்தார்கள். இது உங்கள் பங்கு என்று கூறி அவரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்தார்கள். அது உயர்தரமான திராட்சைப்பழம். அவர் அதனை தனது சட்டைக்குள் போட்டுக் கொண்டு 4.75 ரூபாயை எடுத்து ஹஸ்ரத் சாஹிபின் கையில் கொடுத்து விட்டு, ஹுஸுர் இது மீதமுள்ள பணம் என்று கொடுத்தார். அக்காலத்தில் 5 ரூபாய் என்பது மிகப்பெரும் தொகையாக இருந்தது. நாலணா செலவாகி இருப்பதாக கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பரிவுடன், நமது நண்பர்களிடம் நாம் கணக்குப் பார்ப்பதில்லை என்று கூறினார்கள். பார்சலை உள்ளே எடுத்துக் கொண்டு சென்றார்கள். அறிவிப்பை எழுதுபவர் கூறுகிறார். அவரது சட்டைக்குள் திராட்சையும், கையில் 4.75 ரூபாயும் இருந்தது.

ஹகீம் அப்துர்ரஹ்மான் சாஹிப் குஜ்ரன்வாலா உடைய அறிவிப்பை அவரது மகன் அப்துல் காதிர் சாஹிப் அறிவிக்கின்றார். எனது தந்தையார் கூறியுள்ளார்கள். ஒருமுறை நான் காதியான் சென்றிருந்தேன். சில நாள் தங்கிய பிறகு விடை பெற்றுச் செல்வதற்கு அனுமதி கேட்டேன். ஹுஸுர் (அலை) அவர்கள் சற்று பொறுங்கள் என்றார்கள். நான் இன்னும் சில நாள் கழித்து போய் அனுமதி கேட்டபோது சற்று பொறுங்கள் என்று கூறினார்கள். இப்படியே இரண்டரை மாதங்கள் காதியானில் தங்கி விட்டேன். பிறகு ஹுஸுர் (அலை) அவர்களுடைய இஸாலா அவ்ஹாம் என்ற நூலைக் குறித்து நான் கேட்ட போது ஹுஸுர் (அலை) அவர்கள் அமீர் மஹ்தி ஹஸன் சாஹிபுக்கு ஒரு சீட்டு எழுதித் தந்தார்கள். நான் அவரிடம் சென்று சீட்டை கொடுத்த போது, அமீர் ஹஸன் சாஹிப் கூறினார். மக்கள் என்னை தொல்லைப்படுத்துகின்றனர். பல்வேறு புத்தகங்களை என்னிடம் கேட்கின்றனர். ஆனால் பணமில்லை. இன்னின்ன புத்தகங்கள் எல்லாம் அச்சிட வேண்டியிருந்தது.

அப்படியானால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்த எனது துண்டுச் சீட்டை திருப்பித் தந்து விடுங்கள் என்று அப்துர் ரஹ்மான் சாஹிப் கேட்க துண்டுச் சீட்டை அமீர் ஹஸன் சாஹிப் திரும்ப கொடுத்து விட்டார். சீட்டை கொண்டு போய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொண்டு வந்து திரும்பக் கொடுத்து விட்டு ஊர் திரும்புவதற்கு அனுமதியும் வாங்கி விட்டு வருவதற்காக அப்துர் ரஹ்மான் சாஹிப் சென்றபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உமக்கு புத்தகம் கிடைத்து விட்டதா? என்று கேட்டார்கள். ஹுஸுர், அவர் இன்னின்ன பதிலை கூறினார் என்று நான் சொன்னதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெறும் காலுடன என்னுடன் வந்து அமீர் சாஹிபிடம் கேட்டார்கள். (புத்தகம் ஸ்டாக் இல்லை என்று) நீங்கள் கவலைப்படுகிறீர்கள். இது அவனது பணியாகும். கண்டிப்பாக இப்பணியை அவனே நடத்திக் கொண்டு செல்வான். நீங்கள் எனது சீட்டை வாங்கிக் கொண்டு புத்தகத்தை கொடுத்து விட வேண்டும் என்றார்கள். மேலும் நீங்கள் இப்போதே பதற்றமடைகிறீர்கள். இங்கு இன்னும் நிறைய பேர் வருவார்கள். பெரும் கருவூலமே இங்கிருந்து விநியோகிக்கப்படும் என்று கூறினார்கள். உடனே அமீர் ஹஸன் சாஹிப் நூல்களை வழங்கினார். அப்துர் ரஹ்மான் ஊருக்குத் திரும்பினார்.

அதுபோன்று இன்னொரு அறிவிப்பு குஜ்ரன்வாலாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் முன்ஷி குலாம் ஹைதர் சாஹிப். அவரது இரண்டு அறிவிப்புகளை எடுத்துள்ளேன். அவர் குஜ்ரன்வாலாவைச் சேர்ந்த முன்ஷி ஆமதுத்தீன் சாஹிபின் அறிவிப்பை கூறுகின்றார்.

நான் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய சமூகத்தின் முன் சென்றால், அன்னாருக்கு அன்பளிப்புகள் எதுவும் கொண்டு செல்வதில்லை. ஒருமுறை மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் எனக்கு போதித்தார்கள். அவ்வாறு செய்யக் கூடாது. அவர்களுக்கு முன்னால் வந்து அமரும் போது அவர்களுக்கு காணிக்கை ஏதாவது செலுத்த வேண்டும். அதனால் மனிதனுக்கு வரும் சில துன்பங்கள் விலகுகின்றன. அதற்குப் பிறகு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களிடம் வரும் போது பொருளாதார குறைவின் காரணமாக ஒரு சிறு காணிக்கையை வைத்தேன். அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்கள் அல்லாஹ் உமக்கு பரக்கத்தை தரட்டும் என்று கூறினார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு ஒரு மனிதர் எனக்கு மிக அதிகமாக பணம் கொடுத்தார். நான் கண்டிப்பாக மறுத்தேன். அப்போது அந்த மனிதர் கூறினார். கண்டிப்பாக நீர் பெற வேண்டும் என்றார். இவ்வாறு எனது பணக்கஷ்டம் விலகியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆவின் பரக்கத்திற்கான ஓர் அடையாளத்தை அல்லாஹ் காட்டினான். இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியை பரப்புவதற்காக மக்கள் தியாகம் செய்தவாறு தமது பொருளை எடுத்து வைக்கின்றனர். இஸ்லாத்தின் மீது பரிவு கொண்ட மக்கள் இவ்வாறு தியாகம் செய்யத் துடிக்கின்றனர். அவ்வாறு செய்கின்ற அம்மக்களுக்கும் அல்லாஹ் அதுபோன்ற காட்சியை காட்டுகின்றான்.

பழைய அஹ்மதிகளின் சம்பவங்களை நான் அவ்வப்போது கூறி வருகிறேன். புதிய அஹ்மதிகளிடம் கூட இதுபோன்ற ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் நடந்துள்ளன. இவ்வாறு அல்லாஹ் அவர்களின் ஈமானை உறுதியாக்குகிறான்.

அதற்கு இரு உதாரணங்கள் இன்று நான் எடுத்து வைக்கிறேன். ஐவரிகோஸ்ட்டின் பஸ்ஸம் என்ற பெயர் கொண்ட ஒரு நகரில் ஒரு புதிய அஹ்மதி யாகூப் அலி சாஹிப் அவர்களிடம் சந்தா விகிதாச்சாரங்கள் எடுத்துக் கூறப்பட்டன. மறுநாள் அவர் தஹ்ரீகே ஜதீத் சந்தா, சந்தா ஆம், வக்ஃபே ஜதீத் சந்தாவையெல்லாம் தனது வருமானத்திற்கேற்ப கணக்குப் பார்த்து கொண்டு வந்து விட்டார். அது கிட்டத்தட்ட 50 பவுண்ட் ஆக இருந்தது. அம்மக்களுக்கு இது ஒரு பெரும் தொகையாகும். இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு இவரது முதல் சந்தாவாகும். அறிவிப்பவர் கூறுகிறார். நமது முஅல்லிம் சந்தா ரசீதை கிழிக்கும் போது அந்த புதிய அஹ்மதிக்கு ஒரு போன் வந்தது. நீர் இரண்டு வருடமாக கேட்டுக் கொண்டிருந்த உமக்கு சேர வேண்டிய பணத்தை நாளை வந்து பெற்றுக் கொள்ளும் என்று அந்த போனில் தகவல் வந்தது.

யாகூப் அலி சாஹிப் வியப்படைந்தார். கடனாக கொடுத்த எனது பணம் திரும்ப கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய் விட்டது. இப்போது நான் சந்தா கொடுத்ததால் அது திரும்ப கிடைத்துள்ளது என்றார். அதுமட்டுமின்றி சில நாட்களுக்குப் பிறகு அரசிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. புது

வருடத்திலிருந்து உமது பணியில் பதவி உயர்வும், சம்பள உயர்வும் அதுவும் 50 சதவீத சம்பள உயர்வும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அவர் தனது சம்பள உயர்வுக்கு ஏற்ப சந்தாவையும் இரு மடங்காக்கினார். அதுமட்டுமின்றி பள்ளியின் பல செலவுகளுக்காகவும் பணத்தை தருகிறார். இவை அனைத்தும் இறையருளின் மழையாகும். இது பொருள் தியாகம் செய்பவர்களுக்கு இறைவன் வழங்குவதாகும். புதிதாக வருபவர்களுக்கும் கூட அல்லாஹ் தனது அருளை காட்டுவது மட்டுமின்றி மேன்மேலும் வளரச் செய்கிறான் (2:246) என்ற வாக்குறுதிக்கேற்ப சொல்லுக்கு சொல் நிறைவேற்றித் தருகிறான்.

பெனின் அமீர் சாஹிப் எழுதுகிறார்: பஸீலா பகுதியின் ஓர் ஊர் பெங்கோ. அங்கு நான் தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் பரக்கத்துகளை விளக்கிக் கூறிய போது அப்போது அங்கு ஹலீம் என்ற பெயருள்ள அஹ்மதியல்லாத பெண் 500 பிராங்க் சந்தா கொடுத்தார். ஒரு வருடம் கழித்து மீண்டும் தொடர்பு கொண்டு நான்கு மடங்கு அதிக சந்தா கொடுத்தார். அதற்கான காரணத்தை கூறுகிறார். சென்ற வருடம் நான் சந்தா கொடுத்த பிறகு எனது தொழிலில் ஏற்பட்ட பரக்கத்தை என்னால் விவரிக்கவே முடியாது. எனவே அதுதான் என்னை மீண்டும் சந்தா கொடுக்க வேண்டும் என்று என்னை கவனமூட்டுகிறது. அத்துடன் நான் ஜமாஅத்தில் சேர்கிறேன் என்றும் கூறி பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். பொதுவாக அஹ்மதியல்லாதவர்களிடம் நாம் சந்தா வாங்குவதில்லை. ஆனால் ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் சந்தாவை பெற்றுக் கொள்ளுமாறு நமக்கு நிர்பந்தம் செய்கின்றனர். சந்தாவை சரியான முறையில் ஜமாஅத் பயன்படுத்துகிறது என்று நினைக்கின்றனர்.

நான் கானாவில் இருக்கும் போது மக்கள் (அஹ்மதியல்லாதவர்கள்) தமது ஸக்காத்தை கணக்குப் பார்த்து நம்மிடம் கொண்டு வந்து தருவார்கள். நான் அவர்களிடம் பலமுறை அது பற்றி கேட்டுள்ளேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: எங்கள் மவ்லவிகளிடம் கொடுத்தால் பணத்தை சாப்பிட்டு விடுவார்கள். உங்களிடம் தந்தால் அதனை சரியான முறையில் பயன்படுத்துவீர்கள் என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும் இந்த தியாகங்களால் அவர்களின் பொருளாதார துன்பங்களை மட்டும் அகற்றவில்லை. மாறாக, அவர்களுக்கு ஆன்மீக உணவுத்தட்டில் இருந்தும் அல்லாஹ் அவர்களை பயனடையச் செய்தான்.

ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் இர்பானி (ரலி) அறிவிக்கின்றார். லூதியானாவைச் சேர்ந்த ஹஸ்ரத் நூர் அலி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பழைய தூய சேவகர். அவரது வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. வியாபாரம் கிட்டத்தட்ட முடங்கி விட்டது. வேறு எங்காவது சென்று வேறு ஏதாவது தொழில் செய்யலாம். அதன் மூலம் தனது பொருளாதார நிலையை சீர் செய்யலாம் என்று விரும்பினார். அதன்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் தொடர்ந்து கடிதம் எழுதி வந்தார். ஆனால் சென்ற இடத்திலிருந்து திரும்பிவர இயலவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மரணத்திற்கு பிறகு காதியான் வந்தார். அங்கேயே தங்கி விட்டார். தனது சக்திக்கு மீறி ஜமாஅத்திற்கு பொருளுதவி செய்வார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வள்ளல்தன்மைக்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு கொஞ்சமாக எதனையும் கொடுக்கவே தெரியாது. நான் பயணம் செல்ல முடிவு செய்து ஹஸ்ரத் (அலை) அவர்களிடம் சிறிது பணம் கேட்டேன். ஹஸ்ரத் (அலை) அவர்கள் பணம் வைத்திருந்த பெட்டியை எடுத்து வந்தார்கள். எனது முன்பு பெட்டியை வைத்து எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நான் எனது தேவைக்கேற்ப எடுத்ததில் ஹுஸூர் (அலை) அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறிக்கொண்டேயிருந்தார்கள்.

பிறகு அல்லாஹ், ஸரீவுல் ஹிஸாப் – கணக்குப் பார்ப்பதில் தீவிரமானவன், விரைவானவன் என்பதற்கேற்ப கணக்கு கொடுப்பது மட்டுமின்றி கணக்கு வாங்கவும் செய்து விடுகிறான். சிலவேளை இவ்வுலகிலேயே கணக்கு வாங்கி விடுகிறான். ஆகிரத்தில் கணக்கெடுப்பது தனியாகும். இது சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சி.

ஹஸ்ரத் குலாம் ரஸுல் சாஹிப் ராஜேகி கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி மியான் பக்ஷ் சாஹிபுடைய மகனின் நிகாஹ் குத்பாவை ஓதிய பிறகு திருமணக் கூட்டத்துடன் சென்று விட்டு திரும்பும் போது தான் தெரிய வந்தது. அவருக்கு இந்த மகனைத் தவிர மற்ற குழந்தைகள் காது கேளாதவர்களாகவும், பேசமுடியாதவர்களாகவும் இருந்தனர். காரணமில்லாமல் இந்த சோதனை தரப்படாது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. மிகவும் பயங்கரமான சம்பவம் இது. நான் மிராபக்ஷ் சாஹிபிடம் விசாரித்தேன். அவர் கூறினார். எனது மச்சினியுடைய குழந்தையில் ஒரு குழந்தை ஊமையாக இருந்தது. நான் பரிகாசமாக சிரித்தவாறு எனது மச்சினியிடம் சொன்னேன். குழந்தை பெறுவதாக இருந்தால் பேசவும், கேட்கவும் கூடிய குழந்தையை பெற வேண்டும். ஊமையான செவிடான குழந்தையை, ஒன்றுக்கும் உதவாத குழந்தையை பெற்று என்ன பயன்? பரிகாசத்தில் எல்லை மீறி விட்டேன். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். இதேபோன்ற சோதனை உமக்கு வந்துவிட வேண்டாம். அல்லாஹ் இவ்வாறு பரிகாசம் செய்வதை விரும்புவதில்லை என்று மச்சினி என்னிடம் கூறினார். இருந்தும் கூட நான் அதிலிருந்து விலகவில்லை.மாறாக வேண்டுமானால் எனக்கு ஆரோக்கியமான குழந்தை பிறக்கும் என்றுகூட கூறினேன். எனது இந்த பேச்சு அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமானது. எனக்கும் செவிட்டுக் குழந்தைகள் பிறக்கத் தொடங்கியது. இதே சோதனைக்குப் பிறகு நான் மிகவும் இஸ்திக்ஃபார் செய்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சமூகத்தில் மீண்டும் மீண்டும் துஆவுக்கு எழுதினேன். அல்லாஹ் எனது விருப்பத்தை நிறைவேற்றினான். கடைசி குழந்தை ஆரோக்கியமாக பிறந்தது.

எனவே பரிகாசம் செய்வதை மனிதன் சாதாரணமாக நினைக்கிறான். ஆனால் மற்றவரின் உள்ளத்தில் அது கடும் காயத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. சிலவேளை அத்துயரம் அல்லாஹ்வின் அர்ஷை பிடித்து ஆட்டி விடுகிறது. பிறகு உலகில் இறைவன் கணக்குப்பார்க்க ஆரம்பித்து விடுகிறான். அல்லாஹ் கருணை காட்டுவானாக. உண்மையான தக்வாவை உள்ளத்தில் நிலைநாட்டுவானாக.

ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸுல் ராஜேகி சாஹிப் இன்னொரு சம்பவம் கூறுகிறார்கள். இது 1938 –ல் நடந்தது. பஞ்சாப் Legislative Council –ன் Member -க்காக தேர்தல். இரு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். ஒருவர் சவுத்ரி ரியாஸத் அலி. மற்றவர் முராத் பக்ஷ்சாஹிப் பட்டி. இந்த இரு வேட்பாளர்களும் அத்தொகுதியின் அஹ்மதி மக்களிடம் தமக்கு வாக்களிக்குமாறு விண்ணப்பித்தனர். மியான் சத்தார் கான் (ரலி) கூறினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து ஒரு தீர்ப்பு வெளியாகும் வரை எந்த வேட்பாளருக்கும் ஓட்டுப்போடுவதாக வாக்களிக்க முடியாது. ராஜேகி சாஹிப் கூறுகிறார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய கட்டளைக்கு ஏற்ப அவ்வூருக்கு சென்றேன். அஹ்மதிகளுடன் பல அஹ்மதியல்லாதவர்களும் அச்சபையில் இருந்தனர். ரியாஸத் அலி சாஹிபுக்கு ஓட்டளிக்க வேண்டும் என்ற ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் (ரலி) அவர்களின் தீர்ப்பை நான் கூறினேன். கிலாஃபத்தின் இத்தீர்ப்பைக் கேட்டு ரியாஸத் அலி சாஹிபின் எதிரணியில் இருந்த அஹ்மதிகளைத் தவிர ஏனைய அஹ்மதியல்லாதவர்கள் பெரும் கூச்சலும் எதிர்ப்பும் காட்டினர். அப்பகுதியின் அமைதியை குலைத்து விட்டனர். அஹ்மதியல்லாதவர்கள் இவ்விஷயத்தில் ரியாஸத் அலியுடன் அஹ்மதிகளையும் தரக்குறைவாக பேசத் தொடங்கினர். நாங்கள் மிகவும் பொறுமையோடு அந்த எதிர்ப்பைத் தாங்கிக் கொண்டோம். அந்த சமயத்தில் காதிம் அலி என்ற ஒருவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் ஏசினார். மவ்லவி குலாம் ரஸுல் ராஜேகி சாஹிப் அந்த சபையில் இருப்பவர்களைப் பார்த்து கூறினார்கள். காதிம் அலி! இவ்வாறு அநாகரிகமான நடைமுறை நல்லதல்ல. இறைவன் உம் போன்றோருக்கு அதிக தவணை தரமாட்டான். நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் தவ்பா செய்யவில்லை எனில் விரைவில் பிடிக்கப்படுவீர்.

பிறகு ஜமாஅத் சகோதரர்கள் பொறுமையாக இருக்குமாறும் அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக்க பிநுஹூரிஹிம் வநவூதுபிக்க மின் ஷுரூரிஹிம் – அல்லாஹ்வே இவர்களுக்கு எதிரில் உன்னையே கேடயமாக்குகிறோம்; இவர்களின் விஷமத்திலிருந்து எம்மை காப்பாயாக என்று துஆ செய்யுமாறு அறிவுரை பகன்றவாறு காதியான் திரும்பினார்கள். அவர்கள் திரும்பி வந்தபிறகு காதிம் அலி நோயுற்றார். உள்ளூரில்

சிகிச்சை அளிக்கப்பட்டது. பயன் கிடைக்கவில்லை. நான்கு மாதம் கடும் அவஸ்தைக்குப் பிறகு செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தும் மரணமடைந்து விட்டார்.

மவ்லானா ராஜேகி சாஹிப் தனது ஒரு சம்பவத்தை கூறுகிறார். சியால்கோட்டில் ஹகீம் மவ்லவி நிஸாமுத்தீன் சாஹிப் என்ற ஓர் அஹ்மதி வாழ்ந்து வந்தார். அவர் என்னிடம் கூறினார். இதே ஊரில் ஒரு மவ்லவி இருக்கிறார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடு இருக்கிறார் என்பது குறித்து மிகவும் அழுத்தமாக வாதம் செய்பவராகவும், மஸீஹ் உயிரோடு இருக்கிறார் என்று சொற்பொழிவாற்றுபவர்களாகவும் இருந்தார். யா ஈஸா இன்னீ முதவஃப்பீக வராஃபிவுக (ஈஸாவே நான் உன்னை மரணிக்கச் செய்வேன்; என் அளவில் உயர்த்துவேன் (3:56) என்ற வசனத்தை எடுத்து வைத்தார்.

முழு வசனமும் இவ்வாறு வருகிறது. அதன பிற்பகுதியைப் படித்தால் இன்ஷா அல்லாஹ் வசனத்தின் கருத்து முழுமையாகப் புரியும்.

ஈஸாவே! நான் உமக்கு (இயற்கையான) மரணத்தைத் தருவேன். உமக்கு எனது சந்நிதியில் உயர்வு தருவேன். நிராகரிப்பவர்களி(ன் குற்றச் சாட்டுகளி)லிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துவேன். உம்மைப் பின்பற்றுபவர்களை, நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன். பின்னர் என்னிடம் நீங்கள் திரும்பிவர வேண்டியதிருக்கிறது. அப்பொழுது நான், நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றவற்றில் உங்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவேன் என்று அல்லாஹ் கூறிய நேரத்தை (நினைத்துப் பாருங்கள்). (3:56)

இங்கு இன்னி முதவஃப்பீக வராஃபிவுக என்ற வரிசையில் வந்துள்ளது. மவ்லவிகள் இந்த வரிசையை மிகவும் வேகமாக முன்னும் பின்னும் மாற்றி விடுகின்றனர். முதவஃப்பீக – உன்னை மரணிக்கச் செய்வேன் என்பதை வஜாயிலுல்லஸீனத்த பவூக ஃபவ்கல்லஸீன கஃபரூ இலா யவ்மில் கியாமா – உம்மைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்களை விட இறுதிநாள் வரை மேலோங்கச் செய்வேன் என்பதற்கு பிறகு கொண்டு வருகின்றனர். ஆனால் அசல் வரிசையோ வேறாக உள்ளது. எந்த பயமும் இன்றி இவ்வாறு திருக்குர்ஆனின் வரிசை அமைப்பை மாற்றி விளக்குகின்றனர். பேச்சு வேகத்தில் முதவஃப்பீக – உம்மை மரணிக்கச் செய்வேன் என்பதை பின்னுக்கு தள்ளி விட்டனர். பிறகு இதே வேகத்துடன் திருக்குர்ஆனின் புதிய பதிப்பில் முதவஃப்பீக என்ற வார்த்தையை ஏன் பின்னால் மாற்றி அமைக்கக் கூடாது என்று ஆலிம்களிடம் ஆலோசனை செய்தார். அப்போது அந்த ஆலிம் கூறினார். முதவஃப்பீக பின்னால் தான் வர வேண்டும். ஆனால் நமது வெளியீட்டில் அப்படியே வசனத்தின் இந்த வரிசையை மாற்றினால் மக்கள் கூச்சலிடுவர். கடும் எதிர்ப்பு வரும். அப்போது அந்த ஊரின் மவ்லவி, இந்த வேலையை இனி நானே செய்வேன். எந்த எதிர்ப்பு வந்தாலும் பராவயில்லை என்று கூறி பணம் திரட்டி அமிர்தசரஸிற்கு சென்று திருக்குர்ஆனின் இந்த வசனத்தின் வரிசையை மட்டும் மாற்றி அச்சிட்டுத் தருமாறு வேண்டினார். அச்சகத்தார் மறுத்து விட்டனர். உடனே ஒரு சீக்கிய அச்சகத்திற்கு சென்றார். பெரும் பணம் தருவதாக சொன்னார். ஆனால் முஸ்லிம்களின் மீது கொண்ட பயத்தால் அவரும் மறுத்து விட்டார். மவ்லவி தானே ஒரு அச்சுப்பதிப்பு இயந்திரம் வாங்கிக் கொண்டு வந்து குர்ஆனின் வரிசை அமைப்பை மாற்றி அச்சிட்டு வெளியிடுவோம் என்று முடிவு செய்தார். இந்த முடிவுடன் அவர் வீடு திரும்பியதும் இறைவனது வினோதமான ஆற்றல் வெளிப்பட்டது. மவ்லவி சாஹிபும் அவரது குடும்பத்தினரும் ஒன்றாக பிளேக் நோயால் இறந்து விட்டனர். ஒரே இரவில் வீட்டினர் அனைவரும் இறந்து விட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட பகைமையால் மக்கள் இந்த அளவுக்கு (குர்ஆனை மாற்றும் அளவுக்கு) போகின்றனர். இந்த பெயர்தாங்கி முல்லாக்களிடம் சிறிதும் தக்வா இல்லை. குர்ஆனை மாற்றுவதற்கும் பயப்படுவதில்லை. ஆனால் அபாண்டமோ அஹ்மதிகளின் மீது!

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வும் தனது கணக்கை மிகவும் நூதனமான முறையில் எடுக்கின்றான்.

திருக்குர்ஆனை பாதுகாப்பதாக அல்லாஹ் தான் வாக்களித்துள்ளதை நிறைவேற்றினான்.

எந்த திட்டத்திற்கும் திருக்குர்ஆனுக்கு எதிராக இருப்பின் கலிமா சொல்லாதவனுக்கு கூட வராத துணிச்சல் ஒரு முஸ்லிமுக்கு வந்த போது அல்லாஹ் உடனே தண்டனையளித்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனின் மகத்துவம் கவனத்தில் இருந்தால் மரணத்தைப் பற்றிய சிந்தனை இருந்தால் நமது எல்லா சோம்பேறித்தனமும் போய் விடும். எனவே இறைவனது மகத்துவத்தை உள்ளத்தில் கொள்ள வேண்டும். அவனுக்கு எப்போதும் பயப்பட வேண்டும். அவனது மகத்துவம் உங்களை மறைத்து மன்னிக்கிறது. ஆனால் எவரையும் பிடித்தால் கடுமையாக பிடிக்கிறான். **லா யகாஃபு உக்பாஹா** - அவர்களுக்கு பின்னுள்ளவர்களின் நிலை என்னாகும் என்று கூட அல்லாஹ் கவலைப்படுவதில்லை. (91:16) என்ற அளவுக்கு பிடிக்கிறான். அதற்கு நேரெதிராக அல்லாஹ் பயப்படுபவர்கள் அவனது மகத்துவத்துக்கு உள்ளத்தில் இடம் அளிப்பவர்களுக்கு கண்ணியம் அளிக்கிறான். தானே அவர்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

அல்லாஹ் கருணை காட்டுவானாக. சிறு தண்டனையில் இருந்து கூட நம்மை பாதுகாப்பானாக. வெகுமதிகளை பொழிவானாக. எப்போதும் நமது சிந்தனைக்கு எட்டாத இடத்திலிருந்தும் தனது கருணையின் காட்சியைக் காட்டுவானாக. தனது பயத்தை நம் உள்ளத்தில் நிலை நாட்டுவானாக. முழுமையான தவக்குல் உள்ளவர்களாக நாம் ஆவோமாக. அல்லாஹ் தானே ஒவ்வொரு வேளையிலும் நமக்கு கேடயமாக்குவானாக.

இன்ஷா அல்லாஹ் நான் சுற்றுப்பயணம் செய்கிறேன். இனிவரக்கூடிய சில ஜுமுஆக்களை மற்றவர்களைப் போன்று நீங்களும் (பிரிட்டன் - பைத்துல் ஃபுதூஹ் பள்ளியில் தொழுபவர்கள்) M.T.A. -ல் ஜுமுஆவைக் கேட்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். அல்லாஹ் எல்லா வகையிலும் இந்த பயணத்தை வெற்றிக்கும் பரக்கத்திற்கும் உரியதாக்குவானாக. அதற்காக துஆ செய்யுங்கள்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON,

ON 26.03.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Reviewed by : Moulvi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456